# மாவட்ட ஆட்சியர் செய்திக் குறிப்பு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் மிஷன்வாட்சல்யா திட்டத்தின் அடிப்படையில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாக உள்ள பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சாரா) –1 பணியிடம் (1 காலி பணியிடம்) நிரப்புவதற்கு மாதம் ரூ.27,804/– தொகுப்பூதியத்தில் முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் சமூக பணி / சமூகவியல் / குழந்தை வளர்ச்சி / மனித உரிமை / பொது நிர்வாகம் / உளவியல் / மன நலம் / சட்டம் / பொது சுகாதாரம் / சமூக வள மேலாண்மை ஆகியவற்றில் முதுகலை பட்டம் (அல்லது ) மேற்கண்ட படிப்புகளில் இளங்கலை பட்டத்துடன் திட்ட உருவாக்கம் / சமூக நலம் / பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சியில் செயல்பாடுகள், கண்காணிப்பு, மேற்பார்வை ஆகியவற்றில் இரண்டு வருட பணி அனுபவத்துடன் கணினி அறிவு பெற்ற 42 வயதிற்குட்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பங்களை www.nagapattinam.nic.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம், பூர்த்திசெய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், அறை எண்.209, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் – 611003 என்ற முகவரிக்கு 10.11.2025 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04365 253018 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொள்ளலாம்.

//SD//
AKASH P
District Collector
மாவட்ட ஆட்சியர் / தலைவர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
நாகப்பட்டினம்